

# இளங்குழந்தைகள் மற்றும் தளர்நடைப் பருவத்தினரின் பார்வை மற்றும் கேட்பு பிரச்சினைகளை நிவர்த்தி செய்தல்:

# Washington மாகாணத்துக்கான Three-Pronged Approach (மும்முனை அணுகுமுறை)

## *The Early Support for Infants and Toddlers (இளங்குழந்தைகள் மற்றும் தளர்நடைக் குழந்தைகளுக்கான ஆரம்பகட்ட உதவி, ESIT) திட்டத்திலிருந்து அறிமுகம்*

நிபுணர்களால் அங்கீகரிக்கப்பட்ட வரன்முறைகளின் மூலம், கேட்பு மற்றும் பார்வை தொடர்பான பெற்றோரின் கவலைகள், கவனிக்கத்தக்க இளங்குழந்தைகளின் நடத்தைகள் மற்றும் வளர்திறன்கள் போன்றவற்றை ஆவணப்படுத்தும் ஒரு கருவியாக ஒரு Three-Pronged Approach (மும்முனை அணுகுமுறை, TPA)-ஐ Washington Sensory Disabilities Services (வாஷிங்டன் புலனுணர்வுக் குறைபாட்டுச் சேவைகள், WSDS) வடிவமைத்துள்ளது.

இந்தக் கருவியின் நோக்கம் மூன்று மடிப்புகளைக் கொண்டது:

1. ஒரு குழந்தையின் பார்வை மற்றும்/அல்லது கேட்புத் திறனைப் பாதிக்கக்கூடிய அபாய காரணிகள் மீதான ESIT வழங்குநர்களின் புரிதலை மேம்படுத்துவது.
2. ஒரு குழந்தையின் கேட்பு மற்றும் பார்வைத்திறன் பிரச்சினையை நிவர்த்திக்கப்படுவது அல்லது “நுண்ணாய்வு செய்வது” குறித்த சான்றினை வழங்குதல்.
3. எப்போது ஒரு குழந்தையின் கேட்பு மற்றும்/அல்லது பார்வைத்திறனானது கூடுதல் நோயறிதல் ஆய்வு மதிப்பீட்டுக்கு அவசியமாகிறது என்பதைத் தீர்மானித்தல்.

கேட்பு மற்றும் பார்வைத் திறன் குறித்த பிர்ச்சினைகளை கூடியவரை முன்கூட்டியே அடையாளம் கண்டு குழந்தையின் வளர்ச்சியில் அதன் தாக்கத்தைக் குறைப்பதே இதன் ஒட்டுமொத்த இலக்காகும்.

புறவயமான ஆய்வு நடைமுறைக்கு ஒரு மாற்றாக Three-Pronged Approach (மும்முனை அணுகுமுறை) கருதப்படவில்லை. இதனை கேட்புத்திறனில் உள்காது எழுப்பும் ஒலி (OAE) நுண்ணாய்வு, குழந்தைகளுக்கான பார்வை நுண்ணாய்வு மற்றும்/அல்லது குழந்தைகளுக்கான ஒலியியல் வல்லுநர், பார்வை மருத்துவர் அல்லது கண் மருத்துவரின் நோயறிதல் ஆய்வு மதிப்பீட்டுடன் சேர்த்துப் பயன்படுத்துவது ஏற்றதாக இருக்கும். எனினும் பெரும்பாலும் ESIT வழங்குநர்கள் இந்த உணர்திறன் பாகங்களை நுண்ணாய்வு செய்யவும் கேட்பு மற்றும் பார்வை தொடர்பான தகவல்களை ஒரேயிடத்தில் ஆவணப்படுத்தவும் கிடைக்கக்கூடிய ஒரே முறையாக TPA மட்டுமே உள்ளது.

ஒவ்வொரு குழந்தையின் Individualized Family Service Plan (தனிப்பட்ட குடும்பச் சேவைத் திட்டம், IFSP)-லும் தற்போதைய கேட்பு மற்றும் பார்வைத்திறன் குறித்த தகவல்களைச் சேர்ப்பது ESIT-க்கு அவசியம். குறிப்பாக ESIT-க்கு என்றே TPA வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்தின் உட்கொள்ளும் நடைமுறையின் ஒரு பகுதியாக மற்றும் அதன்பின் வருடம்தோறும் அதன் முடிவுகள் IFSP-யில் ஆவணப்படுத்துவதில் தகவல்களைப் பெறுவதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

*இந்த ஆவணத்தின் பிரதிகளை நீங்கள் வேறு வடிவத்தில் அல்லது மொழியில் பெற விரும்பினால், தயவுசெய்து DCYF Constituent Relations (DCYF வாடிக்கையாளர் தொடர்பு)-ஐ (1-800-723-4831 | 360-902-8060, ConstRelations@dcyf.wa.gov) மூலம் தொடர்புகொள்ளவும்.*

DCYF PUBLICATION FS_0069 TM (11-2021) Tamil

Washington State Department of
CHILDREN, YOUTH & FAMILIES